**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண். 24/2023**

வாதி தரப்பு சாட்சியாக PW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுவாமிநாதன் | Father Name | : | கிருஷ்ணன் |
| Village | : | குப்பசமுத்திரம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | Marine Radio Officer (Retired) |
| Religion | : | | Age | : | 53 |

**முதல் விசாரணை தொடர்ச்சி-**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். கடந்த 20.03.2020ம் தேதியிட்ட பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரயப்பத்திரம் (ஆவண எண் 567/2020) சான்றிட்ட கணினி நகல் **வா.சா.ஆ.1 ஆக** (பிரதி வாதி தரப்பில் ஆட்சேபணையுடன்) குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 24.08.2020 ம் தேதியிட்ட பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரயபத்திரம்(ஆவண எண்.1263/2020) சான்றிட்ட கணினி நகல் **வா.சா.ஆ.2 ஆக** (பிரதி வாதி தரப்பில் ஆட்சேபணையுடன்) குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 27.11.2020 முதல் 31.03.2021 வரையிலான வாதியின் வங்கி பரிவர்த்தனை உண்மை நகல் **வா.சா.ஆ.3** ஆக (பிரதி வாதி தரப்பில் ஆட்சேபணையுடன்) குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 27.01.2021ம் தேதியிட்ட வாதிக்கும் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட வாழ்நாள் குத்தகை ஒப்பந்தம் நகல் தாக்கல் செய்கிறேன். கடந்த 06.10.2023ம் தேதியிட்ட காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகலினை தாக்கல் செய்கிறேன்.

தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.17 18:07:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.